செ.வெ. எண்: 48 நாள்: 19.01.2012

# <u>பத்திரிக்கை செய்தி</u>

<u>கட்டாய, திருப்பி செலுத்தப்படாத அனைத்து கட்டணங்கள்</u> அரசு / அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவ / மாணவியருக்கு மட்டும் முழுமையாகயும், சுயநிதிக் கல்லூரியில் பயிலும் மாணவ / மாணவியர்க்கு (இலவச இருக்கைகளில் பயில்வோருக்கு) அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் வழங்கப்படும் கற்பிப்புக் கட்டண அளவிற்கு ஏற்ப வழங்கப்பட்டு வந்தது. அதனால் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவ / மாணவியரின் 50% இருக்கைகள் பூர்த்தி செய்யப்படாமலே இருந்தன. பொறியியல் படிப்புகளை பொறுத்தவரை கடந்த ஆண்டு 35,159 இருக்கைகளில் 17,689 இருக்கைகள் மட்டும் பூர்த்தி செய்யப்பட்டன. மீதி இடங்கள் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவ / மாணவியரின் வறுமை நிலையால் கட்டாயக் கட்டணம் கட்ட இயலாத நிலையில் இருக்கைகள் பூர்த்தி செய்யப்படவில்லை என்பதை அறிந்து, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தமிழக வரலாற்றில் முதல் முறையாக சுயநிதிக் கல்வி நிறுவனங்களில் இலவச /கட்டண இருக்கைகளில் பயிலும் ஆதிதிராவிட / பழங்குடியின மாணவ / மாணவியர்கள் பயன்பெறும் வகையில், அரசால் அங்கீகரிக்கப்பட்ட படிப்புகளுக்கு **“அரசு நியமித்த சுயநிதி கல்லூரிகளுக்கான கட்டண நிர்ணயக்குழு”** நிர்ணயித்த கட்டாயக் கட்டணம் அனைத்தையும் 10ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பிற்கான மைய அரசின் உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் 2011–2012 ஆம் ஆண்டிலிருந்து வழங்கலாம் என ஆணையிட்டு வரலாற்று சாதனை படைத்துள்ளார்கள். இதனால் ஒரு ஆண்டிற்கு சுமார் ரூ.75 கோடிக்கு மேல் செலவாகும். பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூபாய் இரண்டு இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**